**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு முற்றிலும் சம்பந்தமில்லாத கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தது தொடர்பாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் தெரியும். இந்தக் கடைகளை ஏலம் விடும்போது சில விதிமுறைகள் இருக்கின்றன. 50 ஆண்டுகாலமாக அவர்கள் இருக்கிறார்கள்; மாற்றுக் கருத்து இல்லை. சில இடங்களில் renewal செய்கிறோம். சில இடங்களில் குறிப்பிட்ட சிலருக்கு மறு ஏலம் வைத்துக் கொடுக்கிறோம். விதிமுறைகளுக்குட்பட்டுதான் அதைச் செய்ய முடியும். இருந்தாலும்கூட, அங்கே வெளி மாநிலங்களிலிருந்து வந்து ஏலம் எடுக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். வெளி மாநிலங்களிலிருந்து வருகிறவர்களைத் தவிர்த்துவிட்டு, உள்ளூரில் இருக்கிறவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, விதிமுறைகளுக்குட்பட்டு, துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**36—**

## மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம்

***36618—திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தொகுதியில் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகரிலே ஓர் ஆய்வகம் நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் காஞ்சிபுரத்தில் புதிதாக ஆய்வகம் தேவையில்லை என்று அரசு கருதுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*2019 ஜனவரி 8]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் துறைக்கான இரண்டு துறை அலுவலகங்கள், ஒன்று* Engineering Wing, *மற்றொன்று* Scientists Wing *என்று இருப்பதனை நாங்கள் அறிவோம். அந்த இரண்டு துறை அலுவலகங்களில்* Engineering Wing *என்ற துறை ஏற்கெனவே ஸ்ரீபெரும்புதூரில் ஒன்றும், மற்றொன்று மறைமலைநகரிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றது.* Scientists Wing *என்று சொல்லக்கூடிய ஆய்வுகளைச் செய்யக்கூடிய ஆய்வகம் மறைமலைநகரில் இருக்கிறது என்பதனை நாங்கள் அறிந்திருக்கிறோம். இருந்தாலும்கூட, காஞ்சிபுரத்தில் பெருகிவரக்கூடிய தொழில் வளங்கள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார். அதிகளவில் பட்டுச் சேலையும், கைத்தறி, பருத்தி ஆடைக்கான நெசவுகளும் செய்யக்கூடிய ஒரு நகரமாக, தொகுதியாக காஞ்சிபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள உத்திரமேரூர் தொகுதி விளங்குகிறது. அங்கே பட்டுச்சேலை, பருத்தி நூலிலிருந்து வெளிவரக்கூடிய சாயக் கழிவுகள் பெருமளவில் நீர் ஆதாரத்தைப் பாதிக்கின்றன. ஆய்வகங்கள் மூலமாகத்தான் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும்.*

*அதேபோல,* Blue Metals *என்று சொல்லக்கூடிய* Quarries *அதிகமாக இருக்கின்றன. அதன் மூலமாக பரவக்கூடிய* Air Pollution– *காற்று மாசுபடுதல் அதிகமாக இருக்கிறது. அதேபோல, எங்களுடைய ஊரில் அதிகளவில் அதாவது, 130 அரிசி ஆலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றினால் ஏற்படக்கூடிய* Air Pollution, Water Pollution, *அதில் வெளியேறக்கூடிய உமி, அதில் வரக்கூடிய சாம்பல் போன்றவையெல்லாம் அதிகளவில் சுற்றுப்புறத்தைப் பாதிக்கிறது என்பதனால், இவற்றைக் கருத்தில்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், தொழிற்சாலைகள் பெருகி வரக்கூடிய பகுதியாகவும் இவை இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறக்கூடிய கழிவுகளை ஆய்வு செய்து, அவற்றை உடனடியாகத் தடுத்து, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டிய கடமை இருக்கின்ற காரணத்தினால், அங்கே ஆய்வகத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று வேண்டுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து பதிலளிப்பார் என்று எதிர்பார்க்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஸ்ரீபெரும்புதூரில் ஒரு D.E. அலுவலகமும், இரண்டு A.E. அலுவலகங்களும், ஒரு A.W. அலுவலகமும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேபோல, மறைமலைநகரிலும் ஒரு D.E. அலுவலகமும், இரண்டு A.E. அலுவலகங்களும், ஒரு A.W. அலுவலகமும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

*முற்பகல் 10–50*

அதேபோல், மறைமலைநகரில் சிறந்த ஆய்வகம் ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிலே ஒரு வருடத்திற்கு 2,400 நீர் மாதிரிகளையும் 300 புகை போக்கிக் கழிவுகள் உள்ளிட்ட மற்ற கழிவுகளையும் ஆய்வு செய்கின்ற அளவுக்கு capacity இருக்கிறது. ஆனால், அந்தளவுக்குக்கூட இன்னும் அந்த ஆய்வகத்தில் மாதிரிகள் பரிசோதனைக்கு வருவதில்லை. அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற இடத்தில் தற்போது ஆய்வகம் அமைக்கத் தேவையில்லை என்றே அரசு கருதுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றபடி அங்கே ஆய்வகம் அமைக்க வேண்டிய தேவையிருப்பின், ஆய்வு செய்து கண்டிப்பாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைமலைநகரில் இருக்கக்கூடிய ஆய்வகத்திற்குப் போதுமான அளவில் மாதிரிகள் வருவதில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனென்று சொன்னால், ஸ்ரீபெரும்புதூரில் இருக்கக்கூடிய ஆய்வகமானது காஞ்சிபுரம், உத்திரமேரூர், மதுராந்தகம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய ஒட்டுமொத்தத் தொகுதிகளையும் உள்ளடக்கிய பகுதிகளுக்கான ஆய்வகமாகச் செயல்படுகிறது. அங்கேதான் அதிகமான தொழிற்சாலைகளும் இருக்கின்றன. ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்குட்பட்ட

*2019 ஜனவரி 8]*

*பகுதிகளில் மட்டுமே 5* industrial estates *இருக்கின்றன. அவற்றில் அதிக அளவில் வாகனங்களினுடைய உதிரி பாகங்கள் தயாரிக்கக்கூடிய. . .* (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் தேவையிருப்பின் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துவிட்டார். மேற்கொண்டு என்ன கேட்கிறீர்கள்? கேள்வியை விரைவாக முடியுங்கள்.*

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** *கேள்வியை முடித்துவிடுகிறேன். எனவே, அந்தப் பகுதிகளில் ஆய்வகத்தின் தேவை அதிகமாக இருக்கின்றது. எதை வைத்துச் சொல்கிறேன் என்று சொன்னால், அங்கேயிருக்கக்கூடிய அலுவலகத்திலிருந்து எடுக்கக்கூடிய மாதிரிகளை ஆய்வு செய்வதற்காக கிண்டியிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு கொண்டு செல்கின்ற காரணத்தால்தான் காஞ்சிபுரத்தில் நிச்சயமாக, கண்டிப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வகத்தை அமைத்துத் தருவார் என்ற நம்பிக்கையோடு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றி தெரிவித்துவிட்டார். மாண்புமிகு அமைச்சர், நீங்கள் உட்காருங்கள்.*

*வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**37—**

## கால்நடை மருத்துவமனை

***16617—திரு. எம். செல்வராசு:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) முசிறி தொகுதி, தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், கிடாரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*